Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper
ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

செய்தியாளர்கள் தேவை

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

மலர் Volume : 01 | இதழ் Issue : 008 | புதன்கிழமை Wednesday | 08.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# சீர்காழி உழவர் சந்தையில் முதலமைச்சர் ஸ்டாலின் வாக்கு சேகரித்தார்



## விவசாயிகளிடம் குறைகளையும் கேட்டறிந்தார்

மயிலாடுதுறை:
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் மாலை சீர்காழி, மயிலாடுதுறை, பூம்புகார், நாகப்பட்டினம், வேதாரண்யம், கீழ்வேளூர் ஆகிய சட்டப்பேரவை தொகுதி திமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தமிழக முதல்வரும் திமுக தலைவருமான ஸ்டாலின் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசுகிறார்.

இந்த கூட்டத்தில் பங்கேற்பதற்காக புதுச்சேரி பிரச்சாரத்தை முடித்துக் கொண்ட தமிழக முதல்வர் திருவெண்காட்டில் உள்ள உறவினர் இல்லத்திற்கு வருகைதந்தார். தொடர்ந்து சீர்காழி தென்பாதி தமிழிசை மூவர் மணிமண்டபத்தில் இருந்து நடைபயிற்சியை முதல்வர் தொடங்கினார்.

அங்கு உள்ள உழவர் சந்தைக்குசென்றமுதல்வர், காய்கறி விற்பனையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளிடம் விற்பனை குறித்தும் அவர்களிடம் குறைகள் கேட்டறிந்தார். பின்னர் கச்சேரி சாலை, அரசு மருத்துவமனை சாலை, பிடாரி மேலவீதி, பிடாரி வடக்கு வீதி, பழைய பேருந்து நிலையம் ஆகிய சாலைகளின் வழியே மக்களை சந்தித்தவாறு நடைபயிற்சி செய்தார். தொடர்ந்து சீர்காழி அரசு மருத்துவமனை அருகில் கூடியிருந்த மக்கள் சந்தித்து குறைகளை கேட்டறிந்தார்.

பின்னர்அருகேஇருந்த தேநீர் கடைக்கு திடீரென சென்று தேநீர் அருந்தினார். தேனீர் வழங்கிய ஊழியரிடம் வியாபாரம் எவ்வாறு உள்ளது என கேட்டறிந்தார். அங்கு வந்த மாணவ மாணவிகளுடன் கலந்துரையாடிய முதல்வர், அவர்களுடன் செல்பிஎடுத்துக்கொண்டனர்.

தொடர்ந்து நடைபயிற்சி சென்று கொண்டிருந்த போது பள்ளி மாணவிகளை பார்த்த முதல்வர் தனது நடை பயிற்சி நிறுத்தி அவர்களிடம் ஆர்வமாக கலந்துரையாடினார். மேலும், பொதுமக்களிடம் மதிமுக வேட்பாளர் செந்தில் செல்வனுக்கு உதய சூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார்.

முதல்வரின் நடைபயிற்சியின் போது, உடன் மதிமுக வேட்பாளர் ஆர்.செந்தில் செல்வன், திமுக மாவட்ட செயலாளர் நிவேதா எம். முருகன் எம்எல்ஏ, சீர்காழி எம்எல்ஏ பன்னீர்செல்வம், நகர செயலாளர் சுப்பராயன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலர் முதல்வரை பின் தொடர்ந்து நடந்து வந்தனர்.

# தமிழக தேர்தல் 2026: ஸ்டாலின், எடப்பாடி பழனிசாமி, சீமான், விஜய் மனுக்கள் ஏற்பு



தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட வேட்பாளர்கள் தாக்கல் செய்த வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை (ஏப்.07) தொடங்கியிருக்கும் நிலையில், கொளத்தூர் தொகுதியில் முதல்வர் ஸ்டாலின், எடப்பாடி தொகுதியில் பழனிசாமி, காரைக்குடியில் சீமான், பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு தொகுதிகளில் விஜய் ஆகியோரின் வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன. தமிழக சட்டப் பேரவைத் தேர்தல் 234 தொகுதிகளிலும் ஒரே கட்டமாக ஏப்.23-ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த மார்ச் 30-ம் தேதி தொடங்கியது. முதல் நாளில் முதல்வர் ஸ்டாலின், தவெக தலைவர் விஜய், நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்ளிட்டோர் வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர்.

அதன்பின்னர், 4 பொது விடுமுறை நாட்களில் மனு தாக்கல் நடைபெறவில்லை. இந்நிலையில், வேட்புமனு தாக்கல் செய்ய நேற்று கடைசி நாள் என்பதால், அனைத்து தொகுதிகளிலும் காலை முதலே மனு தாக்கல் களைகட்டியது. எடப்பாடியில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, விருத்தாசலத்தில் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் ஆகியோர் வேட்புமனுக்களை தாக்கல்செய்தனர். சட்டப்பேரவைத்தேர்தலில் போட்டியிட வேட்பாளர்கள் தாக்கல் செய்த வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இன்று தொடங்கியிருக்கும் நிலையில், கொளத்தூர் தொகுதியில் முதல்வர் மு.க.ஸ்டாலினின் வேட்பு மனு ஏற்கப்பட்டது. இத்தொகுதியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நான்காவது முறையாக போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. தவிர, பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு தொகுதிகளில் தவெக தலைவர் விஜய்யின்வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன.

அதேபோல், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிடும் துணை முதல்வர் உதயநிதி, சாத்தூரில் தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், தருமபுரியில் சவுமியா அன்புமணி, காரைக்குடியில் சீமான் ஆகியோரின் வேட்புமனுக்களும் ஏற்கப்பட்டுள்ளன. வில்லிவாக்கம் தொகுதியில் தவெக நிர்வாகி ஆதவ் அர்ஜுனாவின் வேட்புமனு நிறுத்திவைக்கப் பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மனைவியின் சொத்துவிவரம் குறித்த சந்தேகங்களால் நிறுத்திவைக்கப்பட்டதாக தகவல். தியாகராய நகரில், தவெக வேட்பாளர் என்.ஆனந்த் வேட்புமனு ஏற்கப்பட்டது.

# மாம்பழம் சின்னத்தை முடக்கோரிய வழக்கு: ராமதாஸ் தரப்பு ஐகோர்ட்டில் மேல்முறையீடு



சென்னை: சட்டமன்ற தேர்தலில் பாமகவுக்கு ஒதுக்கப்பட்ட மாம்பழம் சின்னத்தை முடக்கவேண்டும்என அக்கட்சியின் நிறுவனர் ராமதாஸ் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மீண்டும் முறையீடு செய்யப்பட்டது.

நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலில் பாமக அன்புமணிக்கு மாம்பழம் சின்னத்தை ஒதுக்கி தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது. இதையடுத்து, மாம்பழம் சின்னத்தை இந்த தேர்தலில் முடக்க வேண்டும் எனக்கோரி பாமக நிறுவனர் ராமதாஸ் சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் மனு தாக்கல்செய்தார்.

இந்தவழக்கில் தேர்தல் ஆணையம் தரப்பு அளித்தபதிலில்,"பதிவு செய்யப்பட்ட கட்சியான பாமகவுக்கு முன்னுரிமை அடிப்படையில் மட்டுமே மாம்பழம் சின்னம் ஒதுக்கப்பட்டது. அன்புமணி மற்றும் ராமதாஸ் என்ற தனி நபர்களுக்கு சின்னம் ஒதுக்கப்படவில்லை. பாமக என்ற பெயரில் மட்டுமே சின்னம் ஒதுக்கப்பட்டது. கட்சிகளுக்கு சின்னம் ஒதுக்க வேண்டும் என்ற அடிப்படையில் தேர்தல் ஆணையம் சின்னத்தை ஒதுக்கியது. கடந்த 2 ஆண்டுகள் எந்த அலுவலகத்தில் இருந்து தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் வந்ததோ? அந்த முகவரிக்குதான் சின்னம் ஒதுக்கீடு செய்து கடிதமும் அனுப்பப்பட்டது" எனத் தெரிவித்தது.

தேர்தல் ஆணையத்தின் வாதத்தை ஏற்ற நீதிமன்றம், அதன் நடவடிக்கையில் தலையிட முடியாது எனக்கூறி மார்ச் 26ம் தேதி வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

இந்நிலையில், பாமக நிறுவனர் ராமதாஸ் தரப்பில், சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வில், சின்னம் தொடர்பாக தலைமை அமர்வு அல்லது வேறு அமர்வு விசாரணை செய்ய உத்தரவிட வேண்டும் என முறையீடு செய்யப்பட்டது.

இந்த மனுவை பரிசீலித்த நீதிபதிகள், "இதுகுறித்து மனுவாக தாக்கல் செய்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்" என தெரிவித்தனர்.

சட்டமன்றத் தேர்தலில் அதிமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள பாமகவுக்கு 18 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. பாமக நிறுவனர் ராமதாஸ் தரப்பு வேட்பாளர்கள் சில தொகுதிகளில் சுயேட்சையாக மனு தாக்கல் செய்துள்ளனர். ராமதாஸ் இந்த தேர்தலில் சசிகலா தலைமையிலான அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி அமைத்து தேர்தலை எதிர்கொள்கிறார்.

## வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# தென், வட கடலோர தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு



சென்னை: தென் தமிழகம், வடக்கு கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களில்) இடியுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து,சென்னை வானிலை ஆய்வு மையத்தின் இயக்குநர் வி.ஆர்.துரை வெளியிட்ட செய்திக் குறிப்பு:கடந்த 24 மணி நேரத்தில், தென் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக, ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம், ராமேசுவரம், தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி, சென்னை ஒய்.எம்.சி.ஏ நந்தனம், வளசரவாக்கம், அண்ணா பல்கலைக்கழகம், திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டையில் தலா 5 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. சென்னை அடையாறு, சிவகங்கை மாவட்டம் காரைக்குடி, புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி, கன்னியாகுமரி மாவட்டம் இரணியலில் தலா 4 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. சுமார் 0.9 கி.மீ. உயரத்தில், மேற்கு வங்கம் முதல் மன்னார் வளைகுடா வரை ஒடிசா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகள், தெலங்கானா, ராயலசீமா, தமிழகம் வழியாக ஒரு காற்றழுத்தக் தாழ்வுப் பாதை (Trough) நிலவுகிறது.

இதன் காரணமாக, தென் தமிழகம், வடகடலோரதமிழகத்தில்ஓரிரு இடங்களிலும்,புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்றும், நாளையும் (ஏப்.7,8) இடியுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

வட உள் மாவட்டங்களில் வறண்ட வானிலை நிலவக்கூடும். ஏப்-9-ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தென் தமிழகம், வடக்கு கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடியுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏப்10-ல் தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏப்.11,12 ஆகிய தேதிகளில் மேற்கு தொடர்ச்சிமலைமாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், டெல்டாமாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். வெப்பநிலை: தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் 2 டிகிரி முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும். ஏப்.9-ம் தேதி முதல் ஏப்.11-ம் தேதி வரை தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை ஒட்டி இருக்கக்கூடும்.

சென்னை, புறநகர் பகுதிகளில் இன்றும், நாளையும் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 35 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 27 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



தேனி மாவட்டம் நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் முன்னிட்டு போடி சட்டப்பேரவை திமுக வேட்பாளர் பன்னீர்செல்வம் தனது வேட்பு மனுவை சட்டமன்ற தேர்தல் நடத்தும் அலுவலரிடம் சமர்ப்பித்தார். உடன் தேனி பாராளுமன்ற உறுப்பினர், தங்கதமிழ்செல்வன் மற்றும் தேனி வடக்கு மாவட்ட கழகத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றியம், நகரம், பேரூர், கிளை கழக, பொதுக்குழு, செயற்குழு, சார்பு அணி நிர்வாகிகள், கழக தொண்டர்கள், இந்நாள் மற்றும் முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் திரளாக கலந்து கொண்டனர்



தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் 11வது பகுதி ஸ்ரீ மது நந்தவன காளியம்மன் திருக்கோவில் மஹா கும்பாபிஷேக விழா திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மேல் வெகு விமர்சையாக நடைபெற்றது. விக்னேஸ்வர பூஜை, சூர்யா பூஜை உடன் தொடங்கிய இவ்விழாவானது கடம் புறப்பாடு விமான கும்பாபிஷேகம், யாத்திர தானமும் நடைபெற்றது. கும்பாபிஷேகத்தை தொடர்ந்து பக்தர்களுக்கு தீபாரதனை காட்டப்பட்டு பிரசாதம் வழங்கப்பட்டன. அதனை தொடர்ந்து காலை 11 மணிக்கு மேல் அன்னதானம் வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் தலைவர் சிவக்குமார், செயலாளர் விஸ்வநாதன், பொருளாளர் ராமசாமி, துணைத்தலைவர் முருகேசன், துணைச்செயலாளர் சிவகுருநாதன் மற்றும் கோயில் நிர்வாகஸ்தர்களும், பொதுமக்களும், பக்த கோடிகளும் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் திரளாக கலந்து கொண்டு ஸ்ரீ மது நந்தவன காளியம்மன் அருளை பெற்றுச் சென்றனர்.

# தேனியில் மின் கழக அலுவலகத்தில் மாவட்டதொழிலாளர்கள் கூட்டம்




தேனி மின் கழக மேற்பார்வையாளர் அலுவலகத்தில் தேனி மாவட்ட தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவை கவுன்சில் சார்பில் கூட்டம் நடைபெற்றது கூட்டத்திற்கு மின் கழக தொழிலாளர் முன்னேற்ற சங்க திட்ட தலைவர் P.செல்வராஜ் தலைமையிலும் தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவை கவுன்சில் செயலாளர் சக்கரை .எம். முருகன் முன்னிலையிலும் கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்தில் நடைபெற இருக்கும் சட்டமன்ற தேர்தலில் தேனி மாவட்டத்தில் நான்கு தொகுதிகளிலும் தொழிலாளர் முன்னேற்ற சங்க த்தின் சார்பில் வாக்கு சேகரிப்பு ஈடுபட்டு தேனி மாவட்டத்தில் நான்கு தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களையும் மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களையும் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் அமோக வெற்றி பெற செய்வது என தீர்மானிக்கப்பட்டது இக்கூட்டத்தில் அமைப்புசாரா தொழிலாளர் முன்னேற்ற சங்க மாவட்ட செயலாளர் இரா கணேசன் தலைவர் பி சந்திர பாண்டியன் கவுன்சில் மாவட்ட துணைத்தலைவர் டாஸ்மாக் பி. சுந்தரபாண்டியன். மாவட்ட கவுன்சில் துணைத்தலைவர் டாஸ்மாக் ஓ. செல்லம் அமைப்பு சாரா மயிலை ஏ. கருப்பசாமி. தேனி மாவட்ட பஞ்சாலை தொமுச தலைவர் பி ஆனந்தராஜ்.மின் கழக தொமுச தேனி தெற்கு பி. வேலுச்சாமி ஆகியோர் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்!

# மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி த.வெ.க வேட்பாளர் எழில்.கேத்தரின் மேல்மருவத்தூர் மருதூர் சின்னவரை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தனி சட்டமன்ற தொகுதி த.வெ.க.சார்பில் விசில் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் எழில் .கேத்தரின் எழில் மலை' மேல்மருவத்தூர் மருவூர் சின்னவர் கோ.ப.செந்தில்குமார் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். அப்போது கட்சி நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

# திமுக அரசின் திட்டங்கள் வெறும் பெயரளவில் மட்டுமே இருக்கின்றன அவர்கள் அறிவித்த எந்தத் திட்டமும் முழுமையாக மக்களைச் சென்றடைந்த வரலாறு இல்லை

## மதுரையில் ராஜன் செல்லப்பா பேட்டி

மதுரை ஐராவதநல்லூர் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் அதிமுக வேட்பாளர் ராஜன் செல்லப்பா அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில்

இந்த ஐராவதநல்லூர் மண்ணுக்கு வரும்போது எனக்கு ஒரு மிகப்பெரிய எழுச்சி கிடைக்கிறது! இங்கே திரண்டிருக்கும் உங்களின் மலர்ந்த முகங்களைப் பார்க்கும்போது, எனது வெற்றி உறுதி செய்யப்பட்டுவிட்டது என்றே தோன்றுகிறது. இது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், புரட்சித் தலைவி அம்மா, மற்றும் புரட்சித் தமிழர் அண்ணன் எடப்பாடியார் ஆகியோரின் ஆசி பெற்ற வெற்றி!"

இன்று பிஜேபி, அமமுக, பாமக என அனைத்துக் கூட்டணிக் கட்சிகளும் ஒன்றிணைந்து, எடப்பாடியாரின் கரத்தை வலுப்படுத்த இங்கே களம் கண்டுள்ளோம். இந்த ஐராவதநல்லூர் என்பது சாதாரண ஊர் அல்ல; இது வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர். கடந்த முறை நமது முன்னாள் முதல்வர் எடப்பாடியார் அவர்கள் நேரில் வந்து கால் பதித்த புனிதமான மண் இது. அந்த நினைவுகளோடுதான் நானும் இன்று உங்கள் முன் நிற்கிறேன்."

இன்று தமிழகத்தில் நிலைமை என்ன? சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுப் போய்விட்டது. பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை. எங்கு பார்த்தாலும் போதைப்பொருள் புழக்கம்! இதைக் கட்டுப்படுத்தத் துப்பில்லாத ஒரு திறனற்ற அரசு இன்று ஆட்சியில் இருக்கிறது. அண்ணன் எடப்பாடியார் ஆட்சியில், ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரிகளைக் கொண்டு வந்தார். 7.5% இடஒதுக்கீடு மூலம் 3,000 ஏழை மாணவர்கள் இன்று மருத்துவர்களாகியிருக்கிறார்கள். ஆனால், இந்த ஐந்து வருடத்தில் ஒரு மருத்துவக் கல்லூரியையாவது இந்த ஸ்டாலின் அரசு கொண்டு வந்ததா

இல்லை! அதனால்தான் சொல்கிறேன், மீண்டும் தமிழகத்தில் எடப்பாடியார் ஆட்சி அமையவேண்டும். உங்கள் வீட்டுப்பிள்ளையாக, இந்த ஐராவதநல்லூர் மக்களின் அடிப்படைத் தேவைகளான சாலை, குடிநீர் மற்றும் மின்சார வசதிகளைச் செய்து தர நான் உறுதி அளிக்கிறேன். இரட்டை இலைக்கு வாக்களியுங்கள்... எடப்பாடியாரின் கரத்தை வலுப்படுத்துங்கள்

கடந்த ஐந்தாண்டுகளில் மக்களுக்கு என்னென்ன நற்பணிகளைச் செய்ய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடனேயே நாங்கள் பணியாற்றி வருகிறோம். கடந்த முறை சுமார் 30,000 வாக்குகள் வித்தியாசத்தில் எங்களை அமோகமாக வெற்றி பெறச் செய்தீர்கள்; தென் மாவட்டங்களிலேயே அதிக வாக்குகள் பெற்றுத் தந்த தொகுதிகளில் இதுவும் ஒன்று. இந்த முறையும் அதே அன்போடும், அதைவிடக் கூடுதல் வாக்கு வித்தியாசத்திலும் எங்களை வெற்றி பெறச் செய்வீர்கள் என நம்பிப் பணியாற்றுகிறோம்

இப்பகுதி மக்களின் நீண்ட காலத் தேவைகளை நாங்கள் நன்கு அறிவோம். மணலூர் பகுதியில் கூட்டுக்குடிநீர் திட்டத்தைக் கொண்டு வந்ததோடு, விரகனூர் அணை மற்றும் பனையூர் அணைகளைச் சீரமைக்க வேண்டும் என்ற கோரிக்கைகளையும் தொடர்ந்து முன்வைத்து வருகிறோம். குறிப்பாக, இந்தப் பகுதிகளில் உள்ள வணிகர்களுக்கும் மக்களுக்கும் பாதுகாப்பான சூழலை உறுதி செய்வதே எங்களின் பிரதான இலக்கு.

திமுக அரசின் திட்டங்கள் வெறும் பெயரளவில் மட்டுமே இருக்கின்றன. அவர்கள் அறிவித்த எந்தத் திட்டமும் முழுமையாக மக்களைச் சென்றடைந்த வரலாறு இல்லை. ஆனால், எடப்பாடியார் அவர்கள் சொன்னதைச் செய்து காட்டுபவர். அம்மா அவர்கள் கொண்டு வந்த தாலிக்குத் தங்கம் திட்டத்தை ஒரு பவுனாக உயர்த்தி வழங்கியது எடப்பாடியார் அரசுதான். தங்கத்தின் விலை எவ்வளவு உயர்ந்தாலும் இந்தத் திட்டம் தொடரும் என உறுதியளித்துச் செயல்படுத்தினார். மேலும், பெண்களுக்கு மானிய விலையில் இருசக்கர வாகனங்கள் வழங்கியதும், ஏழை எளிய மக்களுக்காக 'அம்மா மினி கிளினிக்' திட்டத்தைக் கொண்டு வந்ததும் அதிமுக அரசுதான்

இன்றைய அரசு அம்மா மினி கிளினிக் திட்டங்களை மூடிவிட்டு, 'மக்களைத் தேடி மருத்துவம்' எனப் பொய்யான விளம்பரங்களைச் செய்கிறது. ஆனால் எந்த வீட்டிற்கும் மருத்துவர்கள் நேரில் வருவதில்லை, அரசு மருத்துவமனைகளிலும் போதிய வசதிகள் இல்லை. கடந்த காலங்களில் திமுக கொண்டு வந்த எந்தவொரு ஒழிப்புத் திட்டமும் வெற்றி பெறவில்லை

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், புரட்சித் தலைவி அம்மா மற்றும் எடப்பாடியார் ஆகியோரின் வழியில், நாங்கள் எப்போதும் மக்களுக்கான ஆக்கப்பூர்வமான திட்டங்களையே செயல்படுத்துவோம். வரும் 23-ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்தலில், இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்து எங்களை மீண்டும் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்





கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதி (தனி) தமிழக வெற்றி கழகத்தின் வேட்பாளராக டாக்டர் இளையராஜா வேட்பு மனு தாக்கல் செய்தார். இவர் அண்ணா திமுகவில் மாவட்ட மருத்துவர் அணி செயலாளராக பதவி வகித்தார்.. பலமுறை வாய்ப்புகேட்டும் அதிமுகவில் தனக்கு சீட்டு வழங்காததால் தமிழக வெற்றி கழகம் சார்பில் வேட்பு மனு தாக்கல் செய்தார். ஏற்கனவே தமிழக வெற்றி கழகத்தின் வேட்பாளராக குமரவேல் என்பவர் அறிவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கதுஇணைந்த இரண்டு நாட்களில் தமிழக வெற்றி கழகத்தின் வேட்பாளரானார் டாக்டர் இளையராஜாஏற்கனவே அறிவிக்கப்பட்ட குமரவேல் சுயேச்சையாக வேட்பு மனுதாக்கல் செய்தார்இது குறித்து குமரவேல் கூறும் போது இந்த பகுதியை பொதுமக்களுக்கு நான் அங்கு அறிமுகமானவன்கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கட்சியிலே மாவட்ட இளைஞரணி இணை அமைப்பாளராக பணியாற்றி வந்தேன் இந்த நிலையில் இந்த சுயேட்சையாக வேட்பு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றார்.



தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தல் பவானிசாகர் சட்டமன்ற தொகுதி வேட்பாளராக எம்.எல்.ஏ பண்ணாரி அவர்களை அதிமுக தலைமைக் கழகம் அறிவித்துள்ளது அவருக்கு அகில இந்திய விஸ்வகர்மா பேரவையின் ஈரோடு மாவட்ட கிளையின் சார்பில் ஆதரவுகளை தெரிவித்து மாவட்ட மற்றும் கிளை நிர்வாகிகள் மாவட்ட செயலாளர் ஏ. கே.செல்வராஜ் பவானிசாகர் சட்டமன்ற தொகுதி உறுப்பினரும் வேட்பாளருமான எம்.எல்.ஏ பண்ணாரி அவர்களிடம் ஆதரவு கடிதம் வழங்கினார்கள் அவர்களுடன் பேரவை நிர்வாகிகள் மற்றும் அதிமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



மதச்சார்பற்ற இந்தியா கூட்டணியின் ஈரோடு மேற்கு சட்ட மன்ற தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி கொல்லம்பாளையம் பகுதி வார்டு 54 மற்றும் வார்டு 57ல் உதயசூரியன் சின்னத்திற்கு திமுக கழக நிர்வாகிகள் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகளுடன் சென்று வாக்கு சேகரித்தார்.

# அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்றாத எதிர்க்கட்சிகளுக்குப் பாடம் புகட்ட வேண்டும்

## திமுக வேட்பாளர் கிருத்திகா தங்கபாண்டி பிரச்சாரம்



மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் கிருத்திகா தங்க பாண்டியன் திருப்பரங்குன்றம்ஹார்விபட்டி பகுதியில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் கேட்டு பிரச்சாரத்தில் ஈடுபட்டார்

தொடர்ந்து பிரச்சாரத்தில் திமுக வேட்பாளர்கள் தங்கபாண்டியன் பேசும்போது:

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பாக திருப்பரங்குன்றம் தொகுதியில் வேட்பாளராக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் மட்டற்றமகிழ்ச்சி அடைகிறேன். இந்தப் பிரச்சாரத்திற்கு வருகை தந்து எனக்கு சிறப்பான வரவேற்பு அளித்த கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களுக்கு எனது முதற்கண் நன்றிகளையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்

வரவிருக்கின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில், 'உதயசூரியன்' சின்னத்தில் உங்களிடம் வாக்குகள் கேட்க நான் வந்திருக்கிறேன். நான் வேட்பாளராக அறிவிக்கப்பட்டவுடன் நமது முதலமைச்சரிடம் வாழ்த்து பெறச் சென்றபோது, "மக்களிடம் செல்லுங்கள், உங்களை மக்கள் பெருமளவு ஆதரிப்பார்கள்" என்று நம்பிக்கையூட்டினார். அந்த நம்பிக்கை எதிலிருந்து பிறந்தது என்றால், கடந்த காலங்களில் நாம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் அனைத்தையும் திராவிட மாடல் ஆட்சி செம்மையாக நிறைவேற்றியிருப்பதே காரணமாகும் அடுத்ததாக அமையவிருக்கும் 'திராவிட மாடல் 2.0' ஆட்சிக்காக பல்வேறு புதிய திட்டங்களை எமது தலைவர் அறிவித்துள்ளார். எதிர்க்கட்சியினர் வெறும் இலவச மிக்ஸி, கிரைண்டர் தருவதாகக் கூறுகின்றனர். ஆனால், எமது தலைவரோ உங்கள் விருப்பப்படி தேவையான மின்சாதனப் பொருட்களை நீங்களே வாங்கிக்கொள்ள 8000 ரூபாய் மதிப்புள்ள கூப்பன்கள் வழங்கப்படும் என அறிவித்துள்ளார். மேலும், மகளிர் உரிமைத் தொகை 1000 ரூபாயிலிருந்து 2000 ரூபாயாகவும், மாணவர்களுக்கான உதவித்தொகை 1000 ரூபாயிலிருந்து 1500 ரூபாயாகவும் உயர்த்தப்படும். உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு 35 லட்சம் லேப்டாப்புகள் வழங்கப்படும். நாங்கள் சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் திருப்பரங்கு ன்றத்துல உதயசூரியன் உதிச்சு வரும்போது உங்களுடைய அடிப்படைத் தேவைகள் எல்லாத்தையுமே நாங்க பூர்த்தி செய்றோம்

உதயசூரியன் சின்னத்தில் அளித்து, அமோகமான வாக்குகள் வித்தியாசத்தில் என்னைஜெயிக்கவைக்குமாறு உங்கள் அனைவரையும் மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்

ஹர்விபட்டி பகுதியில் நிழற்குடை கண்டிப்பாக அமைத்துத் தரப்படும். இது இந்த மக்களோட ரொம்ப நாள் கோரிக்கையா இருக்கு. கண்டிப்பா இதையும் நாம செஞ்சு தருவோம்

# தேவகோட்டையில் பெற்றோர்ஆசிரியர் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது



தேவகோட்டை – சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்ந்த சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப்பள்ளியில் பெற்றோர் – ஆசிரியர் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.

ஆசிரியை முத்துலெட்சுமி வரவேற்றார். பள்ளி தலைமை ஆசிரியர் லெ.சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். இந்த கூட்டத்தில் பள்ளி மாணவர்களின் கல்வித் திறன் மேம்பாடு, ஒழுக்கம், வருகை பதிவுகள் மற்றும் பள்ளி வளர்ச்சி குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைய பெற்றோர்களின் பங்கு மிக முக்கியமானது என தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம் வலியுறுத்தினார்.

மேலும், மாணவர்களின் தனித்திறமைகளை கண்டறிந்து வளர்த்தெடுக்க ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து செயல்பட வேண்டும்எனவும் அறிவுறுத்தினார். பள்ளியின் எதிர்கால வளர்ச்சி திட்டங்கள் பற்றியும் விவாதிக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் ஆசிரியர்கள், பெற்றோர்கள் பலரும் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். கூட்டம் பயனுள்ளதாக அமைந்தது.நிறைவாக ஆசிரியை முத்துமீனாள் நன்றி கூறினார்.சிறப்பாக பேசிய பெற்றோர்கள் அமலா மற்றும் சித்ரா ஆகியோருக்கு பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டது பள்ளியின் சிறப்புகள் குறித்து மாணவி ரித்திகா பேசினார்.



தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் வருகிற ஏப்ரல் 23ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இந்நிலையில் ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இந்தியா கூட்டணியின் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன் தனது வேட்பு மனுவை மாநகராட்சி ஆணையாளரும், கிழக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலருமான அர்பத் ஜெயினிடம் தாக்கல் செய்தார். இந்த நிகழ்வில் காங்கிரஸ் கட்சியின் ஈரோடு மாநகர் மாவட்ட தலைவர் ராஜேஷ் ராஜப்பா, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஈரோடு தெற்கு மாவட்ட துணை செயலாளர் செந்தில்குமார், திராவிட கழக ஈரோடு மாவட்ட தலைவர் செந்தில், முஸ்லிம் லீக் கட்சியின் ஆரீப்,காங்கிரஸ் கட்சியின் ஈரோடு மாநகர் 2 ஆவது மண்டலத்தலைவர் கோட்டை விஜயபாஸ்கர்,காங்கிரஸ் கட்சியின் எஸ்.சி.பிரிவு மாநிலத் துணைத் தலைவர் ராஜேந்திரன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் ஈரோடு மாநகர் மாவட்ட தலைவர் எஸ்.எம்.சாதிக், SDBI கட்சியின் கோவை மண்டல செயலாளர் முகமது லுக்மானுல் ஹக்கீம் ஆகியோர் உடனிருந்தனர்.



ஈரோடு மாநகராட்சி வ.உ.சி. பூங்கா விளையாட்டு மைதானத்தில் (07.04.2026) நேற்று மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் மாற்றுத்திறனாளிகளுக்கான இறகுபந்து விளையாட்டுப்போட்டியினை துவக்கி வைத்து பார்வையிட்டார்.



# மதுராந்தகம் தொகுதியில் விவசாயிகளுக்கு முக்கியத்துவம் அளிப்பேன்

## தமிழக வாழ்வுரிமை கட்சி மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் புண்ணியகோட்டி வாக்குறுதி

செங்கல்பட்டு மாவட்டம் தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் தி.வேல்முருகன் அவர்களின் நல்லாசியுடன் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் வையாவூர் கொளப்பாக்கம் ஊராட்சியை சார்ந்த புண்ணிய கோட்டி மதுராந்தகம் பேருந்து நிலையத்தில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட நிர்வாகிகளுடன் ஊர்வலமாகசென்று மதுராந்தகம் தேசிய நெடுஞ்சாலை அருகே அமைந்து ள்ள கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் அதிகாரி நரேந்திரன் அவர்களிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார் பின்பு செய்தியாளரை சந்தித்த வேட்பாளர் புண்ணியகோட்டி பேசியபோது மதுராந்தகம் சட்டமன்ற தொகுதியில் விவசாயிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் மற்றும் மக்களுக்கானமகத்தானதிட்டங்களை பெற்று தருவேன் மதுராந்தகம் பகுதியில் விவசாயம் செழிக்க அழராது பாடுபடுவேன்எனவேகேமரா சின்னத்தில் வாக்களிக்க வேண் டும் என்று பேசினார்.

உடன் கட்சி மண்டல செயலாளர் .எக்ஸ் சுரேஷ் , மதுராந்தகம் தொகுதி செயலாளர் சதீஷ், மதுராந்தகம் தெற்கு ஒன்றிய செயலாளர் மாரி, மதுராந்தகம் வடக்கு ஒன்றிய செயலாளர் திருமலை, உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# அதிமுக ஆட்சி வந்தால் 100 நாள் வேலை 150 நாட்களாக வழங்கப்படும்

## மதுராந்தகம் அதிமுக வேட்பாளர் மரகதம் குமரவேல் பேச்சு



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அச்சரப்பாக்கம் தெற்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட எடையாளம் ஊராட்சியில் தேர்தல் பிரச்சாரம் ஏற்பாட்டினை அச்சரப்பாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் டாக்டர் ரங்கராஜன், எடையாளம் வழக்கறிஞர்சங்கர்அவர்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது மதுராந்தகம் அதிமுக வேட்பாளர் மரகதம் குமரவேல் அவர்களுக்கு பொதுமக்கள் மாலை அணிவித்து மலர் தூவி ஆரத்தி எடுத்து சிறப்பான வரவேற்பளித்தனர்.

இந்த இந்த தேர்தல் பிரச்சாரத்தில் மதுராந்தகம் அதிமுக வேட்பாளர் மரகதம் குமரவேல் பேசுகையில் திமுக ஆட்சியில் 100 நாள் வேலை 20 நாட்கள் மட்டுமே வழங்கப்பட்டது மீண்டும் அதிமுக ஆட்சி அமைந்தால் 100 நாள் வேலை 150 நாட்களாக வழங்கப்படும்என பேசினார் இந்த நிகழ்ச்சியில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# மேல்மருவத்தூர் மருவூர் சின்னவரை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி தி.மு.க வேட்பாளர் அமுலு பொன்மலர்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தனி சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி தி.மு.க.சார்பில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் அமுலு பொன்மலர் மேல்மருவத்தூர் மருவூர் சின்னவர் கோ.ப.செந்தில்குமார் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். அப்போது கூட்டனி கட்சி நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



மதச்சார்பற்ற இந்தியா கூட்டணியின் ஈரோடு மேற்கு சட்ட மன்ற தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி கொல்லம்பாளையம் பகுதி வார்டு 58 மற்றும் வார்டு 59ல் உதயசூரியன் சின்னத்திற்கு திமுக கழக நிர்வாகிகள் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகளுடன் சென்று வாக்கு சேகரித்தார்



ஈரோடு மாநகராட்சி வ.உ.சி. பூங்கா விளையாட்டு மைதானத்தில் (07.04.2026) நேற்று மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்டஆட்சித்தலைவர் ச.கந்தசாமி 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் மாற்றுத்திறனாளிகளுக்கான சக்கரநாற்காலி ஓட்டப்பந்தயம் விளையாட்டுப்போட்டியினை துவக்கி வைத்தார்.

# தொளசம்பட்டியில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட ஓமலூர் தொகுதி அதிமுக வேட்பாளர்



சேலம் மாவட்டம் ஓமலூர் சட்டமன்ற தொகுதியில் அதிமுக வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள R.மணி எம்.எல்.ஏ., தேர்தலை முன்னிட்டு தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார். இதன் ஒரு பகுதியாக, தொளசம்பட்டி மற்றும் ஓமலூர் மேற்கு ஒன்றிய பகுதிகளில் (07.04.26) பொதுமக்களை நேரில் சந்தித்து, வீடுதோறும் சென்று வாக்கு சேகரித்தார்.

பிரசாரத்தின் போது அதிமுக தேர்தல் அறிக்கை, மற்றும் தொகுதி வளர்ச்சிக்கான திட்டங்கள் குறித்து பொதுமக்களிடம் விளக்கினார். மேலும், கடந்த காலத்தில் மேற்கொண்ட வளர்ச்சி பணிகளை எடுத்துரைத்து, மீண்டும் தன்னை வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் SSKR. ராஜேந்திரன், PPS.விக்னேஷ், வெள்ளிங்கிரி, சொக்கலிங்கம் ராஜேந்திரன், உப்பாரப்பட்டி ரத்தினம், முன்னாள் கவுன்சிலர் செந்தில், சுமதி வெங்கடாசலம், BJP கோவிந்தன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். ஓமலூர் தொகுதியில் அதிமுக வேட்பாளர் R.மணி மேற்கொள்ளும் இந்த தீவிர பிரசாரம், தேர்தல் சூழலை மேலும் சூடுபிடிக்கச் செய்துள்ளது.



தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஊர்வசி அமிர்தராஜ் சமத்துவ மக்கள் கழகம் மாநில இளைஞரணி செயலாளர் கார்த்திக் நாராயணன் மரியாதை நிமித்தம் நேரில் சந்தித்து வாழ்த்து கூறினார். இதில் மாவட்ட செயலாளர் மாலைசூடி அற்புதராஜ் மாநில தொழிற்சங்க செயலாளர் ஜெபராஜ் டேவிட் மாநில கலை இலக்கிய அணி செயலாளர் வக்கீல் அந்தோணி பிச்சை மாவட்ட அவைத் தலைவர் கண்டிவேல் பொதுக்குழு உறுப்பினர் ஜோசப் மாவட்ட வர்த்தக அணி செயலாளர் சிவசு. முத்துக்குமார் மாவட்ட தொண்டர் அணி செயலாளர் முத்து செல்வம் மாவட்ட தொழிலாளர் அணி செயலாளர் சங்கர் திருவைகுண்டம் ஒன்றிய செயலாளர் சதீஷ் மூர்த்தி சாத்தான்குளம் ஒன்றிய செயலாளர் தனசெல்வராஜா நாடார் பேரவை மாவட்ட இளைஞரணி தலைவர் நந்தகுமார் திருவைகுண்டம் ஒன்றிய மாணவர் அணி செயலாளர் மகேஷ் மாநகர நிர்வாகி காமராஜ் உட்பட பலர் உடன் சென்றனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை சீயமங்கலம் கிராமத்தில் வேட்பாளர் வசந்தவேல் அவர்களுக்கு ஒன்றிய செயலாளர் வைத்தியநாதன் மற்றும் கிளை செயலாளர் சதீஷ் முன்னிலையில், ஊர் பெண்கள் ஆர்த்தி எடுத்து, மலர் மாலை அணிவித்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.




ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி வ.உ.சி. பூங்கா விளையாட்டு மைதானத்தில் நேற்று (07.04.2026) 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் அமைக்கப்பட்டிருந்த செல்பி பாயிண்டில் புகைப்படம் எடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி வ.உ.சி. பூங்கா விளையாட்டு மைதானத்தில் உள்ள நீச்சல்குளம் பிரிவில் நேற்று (07.04.2026) 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான நீச்சல் விளையாட்டுப்போட்டியில் வள்ளிபுரத்தான்பாளையத்தைச் சேர்ந்த திரு.சுரேஷ் என்பவர் கையில் தேர்தல் விழிப்புணர்வு குறித்த பதாகையினை ஏந்தியபடியே நீரில் 2 மணி நேரமாக மிதந்து விழிப்புணர்வு ஏற்படுத்தியதை பார்வையிட்டார்.

### தமிழகத்திற்கு வழங்க வேண்டிய நிதியை முறையாக வழங்காமல் வஞ்சித்து வரும்

# ஒன்றிய பாஜக அரசின் டெல்லி அணியை இந்தத்தேர்தலில் தமிழக மக்கள் வீழ்த்த வேண்டும் அமைச்சர் கீதா ஜீவன் பேச்சு



தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான கீதா ஜீவன், தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளராகப் போட்டியிடுகிறார். அவர் இன்று 19, 29, 30 ஆகிய வார்டுகளில் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார்.

மாநகரச் செயலாளர் ஆனந்தசேகரன் தலைமையில் நடைபெற்ற இந்தப் பிரச்சாரத்திற்கு, மேயர் ஜெகன் பெரியசாமி, மண்டலத் தலைவர்கள் கலைச்செல்வி, கவுன்சிலர்கள் அதிஷ்டமணி, சோமசுந்தரி பகுதி செயலாளர் ரவீந்திரன், இளைஞர் அணி துணை அமைப்பாளர் செல்வின் மற்றும் கட்சி நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். 4-வது கேட் பகுதியில் பிரச்சாரத்தைத் தொடங்கிய அமைச்சர், கே.வி.கே. நகர் மற்றும் மகிழ்ச்சிபுரம் பகுதிகளில் வாக்குச் சேகரித்து, டூவிபுரம் விநாயகர் கோவிலில் சாமி தரிசனம் செய்தார்.

பிரச்சாரத்தின் போது அமைச்சர் கீதா ஜீவன் பேசியதாவது: தமிழகம் கடந்த 5 ஆண்டுகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியடைந்துள்ளது. ஆனால், ஒன்றிய அரசு வழங்க வேண்டிய உரிய நிதியை வழங்காமல் முடக்கி வருகிறது. 100 நாள் வேலைத் திட்டத்தைச் சீர்குலைக்கும் செயல்களில் ஈடுபட்டு வருகிறது.

தமிழகத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் நலனுக்கும் அக்கறை காட்டாத பாஜக - அதிமுக கூட்டணி என்ற 'டெல்லி அணியை' வீழ்த்த வேண்டியது காலத்தின் கட்டாயம். எல்லோருக்கும் எல்லாம்" என்ற திராவிட மாடல் ஆட்சியில், தூத்துக்குடி தொகுதியில் புதிய ரேஷன் கார்டுகள், மருத்துவ முகாம்கள், காப்பீட்டு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. கார் தொழிற்சாலை, டைடல் பார்க் போன்ற திட்டங்களால் மாவட்ட வளர்ச்சி உறுதி செய்யப்பட்டுள்ளது.

தற்போது மகளிர் உரிமைத் தொகையாக 1,000 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. தேர்தல் வெற்றிக்குப் பிறகு இது 2,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். தமிழகத்தின் மண், மொழி மற்றும் மானத்தைக் காத்திடவும், கடந்த கால சாதனைகளை எண்ணிப் பார்த்து 'உதயசூரியன்' சின்னத்திற்கு வாக்களித்து என்னைப் பெரும் வெற்றியைப் பெறச் செய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த பிரச்சாரத்தில் மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ், மண்டலத்தலைவர் நிர்மல்ராஜ், மாநகர வர்த்தக அணி அமைப்பாளர் ஆனந்தசேகர், இளைஞர் அணி துணை அமைப்பாளர் செல்வின், சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் பால்ராஜ், தொண்டரணி துணை அமைப்பாளர்கள் ராமர், மணி, விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள் அன்பழகன் ராபின், கவுன்சிலர் கனகராஜ், வட்டச்செயலாளர் பாலகுருசாமி, முன்னாள் கவுன்சிலர்கள் அந்தோணிராஜ், பெரியசாமி, இசக்கிமுத்து, முக்கம்மாள், வார்டு நிர்வாகிகள் கார்த்திகேயன், சந்திரசேகர், மாரிமுத்து, தியாகராஜன், தொமுச நிர்வாகிகள் முருகன், உலகநாதன், காங்கிரஸ் மாநில துணைத்தலைவர் சண்முகம், தேமுதிக மாவட்ட செயலாளர் தயாளலிங்கம், மனித நேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் யூசுப், எஸ்டிபிஐ கட்சி தொகுதி பொறுப்பாளர் காதர் உசேன், மதிமுக நகர செயலாளர் முருகபூபதி, கம்யூனிஸ்ட் கட்சி நகர செயலாளர்கள் முத்து, தனலட்சுமி, முக்குலத்தோர் புலிப்படை மாவட்ட செயலாளர் மணி, முன்னாள் காங்கிரஸ் மாவட்ட தலைவர் முரளிதரன், அறங்காவலர் குழு தலைவர்கள் செந்தில்குமார், கந்தசாமி, மற்றும் மணி, அல்பட், மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.